மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.68/2021

பெயர் – ராமுத்தாய் (பி.வா.சா.1)

நாள் – 14.02.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி. தொடர்ச்சி

இருதார மணம் என்பது இந்தியாவில் ஒழிக்கப்பட்டுவிட்டதால் எங்கள் சமுதாயத்தில் அனுமதிக்கப்படும் என்று நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக இருதார மணம் எங்கள் சமுதாயத்தில் உண்டு என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 27.01.2020 ம் தேதி எனது தகப்பனார் பூல்ராஜ் வாதியின் பாதுகாப்பில் இருந்த போது நான் எனது தந்தையின் விருப்பத்திற்கு மாறாக எனது தந்தையை கடத்தி சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. 2019 ம் ஆண்டிலேயே எனது தகப்பனாருக்குரிய சொத்துக்களை எனக்கு எனது தாயாருக்கும் எழுதி கொடுக்கச் சொல்லி துன்புறுத்தி அவரது உடல்நிலை சீர்கொட்டது என்றால் சரியல்ல. எனது அண்ணனிடமிருந்து எனது தகப்பனாரை தூக்கி சென்ற போது எனது தகப்பனார் நல்ல மனநிலையிலோ, நல்ல உடல்நிலையிலோ இல்லை என்றாலும், யார் என்ன சொன்னாலும் கேட்கும் மனநிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டிலிருந்தே எனது தகப்பனார் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாத சூழ்நிலையில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை நான் தூக்கி சென்ற பிறகு 10.02.2020 ம் தேதி அன்று எனது அண்ணனான வாதி வா.சா.ஆ.2 ஆன பொது அறிவிப்பை பத்திரிக்கையில் எனது தகப்பனாரின் மனநிலை சம்மந்தமாக கொடுத்திருந்தார் என்றால் எங்களுக்கு தெரியாது. நாங்கள் தப்பு செய்தாதானே தெரியும். 10.02.2020 ம் தேதி அன்று பத்திரிக்கையில் பொது அறிவிப்பை கொடுத்திருந்தார் என்றாலும், அந்த பொது அறிவிப்பை தெரிந்தே நான் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 10.02.2020 ம் தேதி தபசில் அ அட்டவணை சொத்தை எனது தாயாருக்கு எனது தகப்பனார் எழுதி வைத்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு எனது தகப்பனாருக்கு பக்கவாத நோய் வந்தது என்றால் இல்லை. அவருக்கு கால் முறிவு தான்

ஏற்பட்டிருந்தது. எனது தகப்பனாருக்கு பக்கவாத நோய் இல்லை என எனது எதிர்வழக்குரையிலே, நிரூபண உறுதிக்கூற்றிலே சொல்லவில்லை என்றால் இல்லை. கேட்கும் போது தான் சொல்ல முடியும். வாதி சொல்லியுள்ளது போல் எனது தகப்பனாருக்கு பக்கவாத நோய் இருந்ததால் தான் அதனை மறுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை விசாரிக்கும் போது தானே சொல்ல முடியும். வா.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள மல்லிகா எனது உறவினர் என்றால் இல்லை. மற்றொரு சாட்சியான அபிலாரூபவதி எனக்கு உறவினர் என்றால் சரிதான். தூரத்து சொந்தமாவார். வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதுவதற்கு முன்பாகவே இந்த வாதிக்கு எனது தகப்பனார் உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் சொத்து விபரத்தின் கீழே(மேற்படி பூல்ராஜ் அவர்கள் கையெழுத்து போட தெரிந்திருந்தாலும் வயது முதிர்வின் காரணமாக கை நடுக்கத்தினால் கைரோகை வைத்துள்ளார் என்றும், இடைசறுகளாக கையால் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு கையெழுத்து போட முடியாமல் கை நடுங்கியதால் அவ்வாறு எழுதப்பட்டிருந்தது. எனது தகப்பனாருக்கு பக்கவாதம் காரணமாக தான் கை நடுங்கியது என்றால் சரியல்ல. வயது முதிர்வின் காரணமாக கை நடுங்கியது. எனது தகப்பனார் எனக்கு வா.சா.ஆ.13 ஆவணம் மூலமாக எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.13 என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்திலும் (மேற்படி பூல்ராஜ் அவர்கள் கையெழுத்து போட தெரிந்திருந்தாலும் வயது முதிர்வின் காரணமாக கை நடுக்கத்தினால் கைரோகை வைத்துள்ளார் என்றும், இடைசறுகளாக கையால் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். வயது முதிர்வின் காரணமாக கை நடுங்கியதால் தான் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 மற்றும் 13 ல் ஆவணங்களில் உள்ள சங்கதிகளை எனது தகப்பனாருக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரது இசைவு பெற்றதாக குறிப்பிட்டு காண்பிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் வாசித்து காண்பித்தார்கள். அந்த ஆவணத்தை வாசித்து காண்பித்ததாக எனது குறுக்கு விசாரணையில் தான் முதல் முதலில் கூறுகிறேன் என்றால் எல்லா விபரத்தையும் எதிர்வழக்குரையில் சொல்ல முடியாது. விசாரிக்கும் போது தான் சொல்ல முடியும். வா.சா.ஆ.13 ல் கண்டுள்ள ராஜம்மாள் மற்றும் அன்னலட்சுமி ஆகியோர்கள் எனக்கு

நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சொந்தகாரர்கள் என்பதால் தான் வந்தார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிக்கு கடந்த 02.11.2010ம் தேதி எழுதிக் கொடுத்த உயிலை ரத்து செய்ய நினைத்து வாதியிடம் அசல் உயில் ஆவணத்தை எனது தந்தை பூல்ராஜ் கேட்ட போது வாதி கொடுக்க மறுத்துவிட்டார் என்ற விபரத்தை எனது தந்தையார் வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் உயில் ஆவணத்திலேயே எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் காலம் வரை மாற்றி எழுதிக் கொடுக்கலாம் என எழுதிக் கொடுத்துள்ளார். எனது தகப்பனார் உண்மையிலேயே சுயநினைவோடு வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணத்தை எழுதியிருந்தால் மேற்படி விபரத்தை சொல்லியிருப்பார் என்றாலும், இல்லாத காரணத்தினால் தான் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணத்தில் எனது தகப்பனார் கையொப்பம் செய்ய மறுத்ததால் எனது தகப்பனாரின் கைரோகையை அவருடைய இசைவு இல்லாமலேயே நாங்களாக வைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. வாதி கடந்த 16.03.2020ம் தேதி அன்று வா.சா.ஆ.6 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பை எனக்கு, எனது தாயார், எனது தங்கை, எனது தகப்பனார் மற்றும் சார்பதிவாளருக்கு அனுப்பினார் என்றால் சரிதான். எனது தகப்பனார் தான் அந்த அறிவிப்பை அனுப்பினார். அவர் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக கொரோனாவில் இறந்துவிட்டார். வா.சா.ஆ.7, 8, 9 ஆவணங்களான அஞ்சலக ஒப்புகை அட்டைகளில் உள்ள கையொப்பம் என்னுடைய தகப்பனாரின் கையொப்பம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7ல் உள்ளது மட்டுமே எனது தகப்பனாரின் கையொப்பம். வா.சா.ஆ.8 மற்றும் 9ல் உள்ளது எனது தகப்பனாரின் கையொப்பம் கிடையாது. வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்திய 5 நாட்கள் கழித்து வா.சா.ஆ.7 ஆவணமான அஞ்சலக ஒப்புதல் அட்டையில் எனது தகப்பனார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் 5வது நாளா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடைய தகப்பனாருடையது அல்ல என்று எனது எதிர்வழக்குரையிலோ, நிரூபண உறுதிக்கூற்றிலோ சொல்லவில்லை என்றால் இல்லை. விசாரணையின் போது தான் சொல்ல முடியும். வா.சா.ஆ.6 ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரம் தெரியுமா என்றால் எனது தகப்பனார் தான் வாங்கினார். கோர்ட்டுக்கு போக வேண்டாம். நம் குடும்பத்திற்கு ஆகாது என்று சொல்லிவிட்டார்.

கூப்பிட்டு பேச வேண்டும் என்று சொன்னார். அவர் வரவில்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தை பற்றி எதிர்வழக்குரை தயாரிக்கும் போது எனது வழக்கறிஞரிடம் சொன்னோ என்றால் சொல்லவில்லை. வாதி வழக்குரையில் உள்ள விபரத்தை எங்கள் வழக்கறிஞர் எங்களுக்கு சொல்லி அதன் அடிப்படையில் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி தெரியாது எனக்கு, வா.சா.ஆ.12, 15, 16 ஆவணங்களான உயில் ஆவணங்களை பற்றி மட்டும் எனக்கு தெரியுமா என்றால் எங்களுக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆவணத்தின் அசல் எங்களிடம் கிடையாது. எனக்கு எனது தங்கைக்கும் எனது தகப்பனார் எழுதிக் கொடுத்த உயில் ஆவணத்தின் அசல் எங்கள் கையில் இல்லை என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு விபரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், தெரியாது என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரங்கள் உண்மையானது என்பதால் தான் அதுபற்றி மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ல் உள்ள கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பம் கிடையாது அந்த கையொப்பம் என்னால் போடப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் வந்த பிறகு தான் நான், எனது அம்மா, எனது தங்கை எல்லோரும் சேர்ந்து கூட்டு சதி செய்து எனது தகப்பனார் எனக்கு வழக்கிடை ஆ அட்டவணை சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் பொய்யாக உருவாக்கினோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் வாதியை பெரிதாக நினைத்து கொண்டு பதில் அனுப்பவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது பூல்ராஜ் உயிருடன் இருக்கும் போது எனது சகோதரர் ராஜாராமுக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆவணத்தில் உள்ள சொத்துக்களை எனது தாயார் ராஜம்மாளுக்கு எழுதிக்கொடுக்க எனது தந்தைக்கு உரிமையுள்ளது என்ற விபரத்தை சொல்லியுள்ள நிலையில் அதனை எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கேட்கும் போது தான் சொல்ல முடியும். இந்த வழக்கினை அ அட்டவணை சொத்து எனது அண்ணன் வசம் தான் தற்போது உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. எனது தாயார் அனுபவித்து வருகிறார்.

எனது செல்வாக்கை பயன்படுத்தி பட்டா மட்டும் மாற்றியுள்ளேன் என்றாலும், தாவா சொத்திற்கான அனுபவம் வாதி வசம் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ன் அடிப்படையில் எனது தாயாருக்கு எந்த உரிமையும் அ அட்டவணை சொத்தில் பொறுத்து ஏற்படாதது என்றால் சரியல்ல. எனது தாயாரின் அனுபவத்தில் தான் உள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் ராஜம்மாள் எனது தகப்பனாரின் மனைவி என்று உள்ள நிலையில் எனது தாயார் எப்போதுமே எனது தகப்பனாருக்கு சட்டப்படியான மனைவியே அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தை நாங்களே உற்பத்தி செய்ததால் அந்த ஆவணத்தில் எனது தாயாரை எனது தகப்பனாரின் சட்டப்படியான மனைவி என பொய்யாக காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணங்கள் எனது தந்தைக்கு தெரியாமலும் அவரது இசைவுயில்லாமலும் 1 முதல் 3 பிரதிவாதிகளாகிய எங்களால் மோசடியாக கைரோகை பெற்று உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டதால் அதன் அடிப்படையில் எங்களுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் ஏற்படாத என்றால் சரியல்ல. சட்டப்படி எங்களுக்கு தான் செல்லும். வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணங்கள் மோசடியாக எனது தகப்பனாருக்கு தெரியாமல் அவரது இசைவு இல்லாமல் ஏற்படுத்தியதால் அந்த ஆவணங்களை பொறுத்து வாதியால் கோரப்பட்டுள்ள விளம்புகைப் பரிகாரம் வாதிக்கு கிடைத்தக்கது தான் என்றால் சரியல்ல. எனது அம்மாவுக்கும் எனக்கும் உரிமையுள்ளதாகவும். எனவே வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.